

# 1

## கடக்கிட்டி முடக்கிட்டி

வயதான கிழவன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அவனுக்கு உதவி செய்பவர்கள் யாருமே இல்லை. அதனால் அவன் தானே பாடுபட்டுப் பணம் சம்பாதித்தால்தான் பிழைக்க முடியும்.

அவன் ஒரு அடர்ந்த காட்டுக்குப் பக்கத்தில் சிறிய குடிசை ஒன்று போட்டுக்கொண்டான். அந்தக் காட்டில் நாள்தோறும் விறகு ஒடித்து வருவான். பிறகு அதைச் சுமையாகக் கட்டுவான். பக்கத்தில் இருந்த ஒரு பட்டணத்தில் அதை விற்று, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தான்.



# 2

## கடக்கிட்டி முடக்கிட்டியும் பட்டணத்துக் குதிரையும்

அந்தக்குதிரையினால்தான் ஒருகுடும்பமே பத்து ஆண்டுகளுக்குமேல் பிழைத்து வந்தது. ஆனால், இப்போது அது கிழடாகிவிட்டது. இனிமேல் அதை வண்டியில் பூட்டி ஓட்ட முடியாது. அதனால் ஜட்காக்காரன் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் அதைத் தன் வீட்டை விட்டு விரட்டி அடித்துவிட்டான்.

பாவம், அந்தக் கிழட்டுக்குதிரை கண்ணீர் விட்டுக்கொண்டே நடந்தது. சாலை ஓரங்களில் முளைத்திருந்த புல்லை மேய்ந்தவாறே மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்தது. அப்படியே



# 4

## கடக்கிட்டி முடக்கிட்டியும் சர்க்கசும்

ஒரு நாள் விறகை விற்றுவிட்டுக் கிழவன் வழக்கம்போல் சத்திரத்திற்கு வந்து படுத்துத் தூங்கலானான்.

கடக்கிட்டி முடக்கிட்டி பச்சைப் புல்லைத் தின்றுவிட்டுக் கொஞ்சம் படுத்திருந்தது. ஆனால், அதிக நேரம் அப்படிப் படுத்திருப்பது அன்று ஏனோ அதற்குப் பிடிக்கவில்லை. அது எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தது.

கிழவன் தூங்கி எழுவதற்கு முன்னால் என்ன செய்யலாம் என்று அது யோசனை



# 6

## கடக்கிட்டி முடக்கிட்டியும் காட்டுவிலங்குகளும்

முயல் எப்பொழுதுமே பயந்த இயல்புடையது. அதன் பெரிய காதுகளின் .உதவியைக் கொண்டு சின்னச் சத்தத்தையும் கண்டு பிடித்துவிடும். அப்படிச் சத்தம் கேட்டால் உடனே தாவி ஓடிப் புதருக்குள் பதுங்கிக் கொள்ளும்.

இந்தக் கோழை முயல்களையெல்லாம் தோற்கடிக்கச் செய்யும்படியாக அவ்வளவு பெரிய கோழை முயற்குட்டி ஒன்று இருந்தது. சிறிய ஒலியைக் கேட்டாலும் 'விறுக்கு விறுக்கு' என்று நடுங்கும்; தாவித்தாவி ஓடிவிடும்.